

தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன் தந்தை வேலுமணி , மாநகர் மாவட்ட திமுக இளைஞரணி முன்னாள் அமைப்பாளர் மோகன்குமார் ,கோவை மாவட்ட திமுக முன்னாள் அவைத்தலைவர் பி.எஸ்.ஜானகிராம் அவர்களின் மனைவி சம்பூர்ணம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 56 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஒண்டிப்புதூர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மறைவையொட்டி அவர்களது இல்லத்திற்கு தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி நேரில் சென்று, அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டார். மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் கணபதிராஜ்குமார், மேயர் ரங்கநாயகி , பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.மணிகண்டன், மகுடபதி ,மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், அசோக் ஆறுக்குட்டி ஏ.பி.நாகராஜ், பகுதிச் செயலாளர்கள் துரைசெந்தமிழ் செல்வன், கார்த்திக்செல்வராஜ், எஸ்.எம்.சாமி, மா.நாகராஜ், வி.ஐ.பதுருதீன், மார்க்கெட் மனோகரன்,சிங்கை மு.சிவா, கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், தலைமை செயற்குழு உறுப்பினர் சோமு என்கிற சந்தோஷ் வட்டக் கழகச் செயலாளர்கள் கி.நாராயணன்,கே.ஆனந்தகுமார், டவுன்பா.ஆனந்த்,சுரேஷ்நாராயணன்,இளங்கோவன், சண்முகம், சுரேஷ்குமார் கவுன்சிலர்கள் சாந்தாமணி , சுமித்ரா கஸ்தூரி அருண், ரஹ்மான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஃபெஞ்சல் புயல் வெள்ள நிவாரணப் பொருட்களை விழுப்புரம் மாவட்டத்திற்கு கொண்டு செல்லும் வாகனங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கொடியசைத்து அனுப்பி வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், வடக்கு மாவட்ட செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாவட்ட செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### அவிநாசி தொகுதியில் ரூ.9 கோடியே 14 லட்சம் மதிப்பீட்டில் புதிய வளர்ச்சிப்பணிகள்!

# 145 பயனாளிகளுக்கு ரூ.68.58 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## ஆ.இராசா எம்.பி., புதிய பணிகளை துவக்கி வைத்து நலத்திட்டங்களை வழங்கினார்!

கோவை, டிச.9-

அவிநாசி சட்டமன்ற தொகுதியில், ரூ.9 கோடியே 14 லட்சம் மதிப்பீட்டில் புதிய வளர்ச்சிப்பணிகளை துவக்கி வைத்து, 145 பயனாளிகளுக்கு ரூ.68.58 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா வழங்கினார்.

திருப்பூர் மாவட்டம், அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாப்பாக்குளம் ஜோதி முத்து மஹாலில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் வருவாய் துறையின் சார்பில் 118 பயனாளிகளுக்கு ரூ.52.32 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனைப் பட்டாகளையும், உணவு வழங்கல் மற்றும் பாதுகாப்புத்துறையின் சார்பில் 06 பயனாளிகளுக்கு ரூ.30,300 மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 08 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலும், சேவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் பயிர் கடன்களையும், வேளாணமைத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.4,650 மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 01 பயனாளிக்கு ரூ.20,000 மதிப்பீட்டிலும் என மொத்தம் 145 பயனாளிகளுக்கு ரூ.68.58 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி அவிநாசி சட்டமன்ற தொகுதியில் ரூ 9 கோடியே 14 லட்சம் மதிப்பீட்டில் புதிய வளர்ச்சிப்பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா துவக்கி வைத்தார்.

ஆ.ராசா பேசியதாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் நடைபெற்று இருக்கக்கூடிய திட்டப்பணிகள் அனைத்தையும் விரைவாக முடித்து மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் அவிநாசி வட்டத்திற்குட்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கப்படுகிறது. ஏழை, எளிய ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு நிலங்களை கண்டறிந்து பட்டா வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்ற உடனே இப்பகுதியில் உள்ள மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் இன்றைய தினம் பட்டா வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது. அரசு தரிசு நிலங்களை கண்டுபிடித்து பொருளாதாரத்தில் அடித்தட்டு மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றது. வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு தனியாக ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் நியமிக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அதன் அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய் அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். அதனடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய அறிவிப்பை வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார் என எதிர்பார்கிறேன். இப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் வருவாய் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கி இன்றைய தினம் இலவச வீட்டு மனைப்ப பட்டாக்களை வழங்க ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எனது பாராட்டுகளை உங்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான திட்டம் அடுத்த மாதம் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்துவதற்கான அறிவிப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார். உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம் மற்றும் முதுமையில் பாதுகாப்பு இந்த ஐந்தும் இருத்தல் வேண்டும் என்ற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார். நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள பொது மக்களின் அனைத்து தேவைகளும் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்திக்கும் அனைத்து பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும் உங்கள் தொகுதியில் மக்களை சந்தித்து என்ன தேவை என்பதை அறிந்து உடனடியாக நிறைவேற்றுங்கள் என்று உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் பொதுமக்களின் தேவைகள் படிப்படியாக நிறைவேற்றபட்டு வருகிறது. இதுபோன்று பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு பொதுமக்களாகிய நீங்கள் அனைத்து ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று ஆ.ராசா எம்.பி., தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர், அவிநாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர், திருப்பூர் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, ஒன்றிய செயலாளர்கள் எஸ்.ஆர்.பழனிசாமி திருமுருகன்பூண்டி, ஈ.சிவப்பிரகாஷ் அவிநாசி, க.பால்ராஜ் சேவூர், நகர செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி திருமுருகன்பூண்டி, அவிநாசி பேரூர் செயலாளர் திராவிடன் வ.வசந்த், பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, மாவட்ட அமைப்பாளர்கள் எல்.ஐ.சி. அவிநாசியப்பன் தொழிலாளர் அணி, பெரியார் காலணி எம்.எஸ்.மணி வர்த்தகர் அணி, மாணவரணி துணை அமைப்பளர் ஆர்.என்.விவேக், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் சு.செல்வ ரங்கம், திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர், 1ம் மண்டல முன்னாள் தலைவர் வெ.ராதா கிருஷ்ணன், அவிநாசி வட்டாட்சியர் சந்திரசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார், பேரூராட்சி செயல் அலுவலர் சண்முகம், சுகாதார ஆய்வாளர் கருப்பசாமி, ஊராட்சி தலைவர்கள் பாப்பாங்குளம் கவிதா வெங்கடாசலம், தத்தனூர் விஜயகுமார், போத்தம்பாளையம் கவிதா பழனிசாமி, அய்யபாளையம் கருப்பசாமி, நடுவச்சேரி வரதராஜன் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் கார்மேகம் செந்தில் ஏற்பாட்டில் வெள்ளகோயில் அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை ஒன்றிய செயலாளர் கே.சந்திரசேகரன், நகர செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் யுவராஜ் உள்பட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

### கே.கே.செல்லப் பாண்டியன் தலைமை! ஆ.செந்தில் வரவேற்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழா திராவிட கருத்தரங்கம்!

## கலை கதிரவன் தொடங்கி வைத்தார் ! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - த.சந்திரசேகரன்– நாமக்கல் ம.மோக நிதி - தஞ்சை ஜோ.வியானி விஷ்வா - தமிழினியன் சிறப்புரை!

புதுக்கோட்டை டிச 9 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா திராவிட கருத்தரங்கம் 06.12.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நகர்மன்ற வளாகம், புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரையாற்றினார்.

கவிச்சுடர் கவிதைப் பித்தன், த.சந்திரசேகரன், அரு. வீரமணி, சுப.சரவணன், செ.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ். எஸ்.கருப்பையா, பெ. ராஜேஸ்வரி, க.மதியழகன், சு.சண்முகம், தவ. பாஞ்சாலன், டாக்டர் செ. குறிஞ்சிவாணன், பூங்குடி எம்.சிவக்குமார், அ.ரெத்தினம், ப.ரெங்கராஜன் மா. மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட்டு (எ) ஷாஜகான், ஏ.இராம லிங்கம், ஆ.ஜேம்ஸ், மு.ராஜதுரை, மு.க.அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் கலை. கதிரவன் கருத்தரங்கை துவங்கி வைத்தார். பொது தலைப்பு இளந்தலைவரின் இலட்சிய பயணம். இயக்கத்தில் இளைஞரணி செயலாளர் என்ற தலைப்பில் கழக இளம் சொற்பொழிவாளர் நாமக்கல் ம.மோக நிதி, ஆட்சியில் துணை முதலமைச்சர் என்ற தலைப்பில் தஞ்சாவூர் ஜோ.வியானி விஷ்வா, கருத்தியலில் திராவிட இயக்கத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் புதுக்கோட்டை சோ. தமிழினியன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். மேலும் ஒன்றிய கழக செயலாளர்

மு.க.ராமகிருஷ்ணன், என்.சேட்டு, எம்.பரமசிவம், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், அ. இளங்குமரன், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், ராப்பூசல் செந்தில்குமார், ஆர். செல்லத்துரை, பேரூர் கழக செயலாளர்கள் உ. முருகேசன், ப. அண்ணாத்துரை, எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, மாவட்ட கவுன்சிலர்கள் , த.செல்வம், கை. பழனிச்சாமி, பேரூராட்சி துணைத் தலைவர்கள் எம்.ஏ.எம். இம்தியாஸ், எம்.நைனா முகம்மது, கழக முன்னோடிகள் மு.கலியமூர்த்தி, எம்.எம்.பாலு, ராம.செல்வராஜ், மாவட்ட அணிகள் அமைப்பாளர்கள் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், அ. பிரபா, செந்தாமரை பாலு, வி. என்.எம்.பாலு, வி.ஜி. ஆர். மணிவண்ணன், க. கவிவேந்தன்,

சி.அரங்கநாயகம், எஸ். வி. ஆர்.ஜெய் ஸ்டாலின், வழக்கறிஞர் என்.வீரையா, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துசாமி, விளாப்பட்டி எம். சிவா, மாவட்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் மலையூர் ஆர். ராமசாமி, ஜெ.அஸ்ரப் அலி, மணிமொழி மனோகரன், கி.சுப்பிரமணியன், எம்.காதர் கனி, சுமோ பாலு, ஏ.வெற்றிச் செல்வன், வை.ஆதிமூலம், வழக்கறிஞர் ரவிச்சந்திரன், கீரை. ஆ.ராஜேந்திர சோழன், கவிஞர் மரிய எட்வின், ஏ. சுந்தர்ராஜ், என்.ஆர்.பரிமளம், ஏ.பி. ஆர் ராஜாங்கம், கே.பி.எஸ் மகேந்திரன், மெஸ் மூர்த்தி, ராஜகோபாலபுரம் ஆர். செந்தில்குமார், ராம. பாலசுப்ரமணியன், பா. ஹரிகரன், வே.கோவிந்தன், டாக்டர் தவ.பா.உதயசூரியன், டாக்டர் பிரபாகர் தாஸ், சி.வெங்கடேசன், ப.தங்கமணி, கே.மகேந்திரன், ஜெனி இளங்கோ, அரசு வழக்கறிஞர்கள் எம்.செந்தில்குமார், எஸ்.ரமேஷ், வாகை சேகர் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் வடவாளம் க.செ.மணிமாறன், செரமேஷ், பிரபு கேண்டின் பன்னீர், டி. அப்புக்காளை, புதுநகர் குமார், அக்ரோ செல்வம், தென்றல் சேகர், தெய்வானை, ராயல் சபாபதி, சிப்காட் சந்திரசேகரன், சுகி (எ) சுகுமாறன், வாராப்பூர் சதீஷ்குமார், மேல விடுதி ஆறுமுகம், செ.கணேஷ், ஆர். ஆசைத்தம்பி, ஹரிகரன், ஞானவேல், மகேந்திரன், கார்த்திக், ஜெரால்டு நிக்கேஷ் மாநகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொருளாளர் துணை மேயர் எம். லியாகத் அலி நன்றி கூறினார்.



திருச்சியில் சட்ட மேதை அம்பேத்கரின் நினைவு நாளை ஒட்டி திருச்சி மத்திய மாவட்ட தி,மு,க, சார்பில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வைரமணி தலைமையில் அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாநகரச் செயலாளர், மேயர் அன்பழகன் முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி பகுதிச் செயலாளர்கள் மோகன்தாஸ், நாகராஜ் கமல் முஸ்தபா , கோ ட்டத் தலைவர் துர்கா தேவி, கவுன்சிலர் கலைச்செல்வி, பி.ஆர்.பாலசுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் கவிதா, கருணாமூர்த்தி, பந்தல் ராமு, கருப்பையா, மாவட்டப் பிரதிநிதி வழக்கறிஞர் மணிவண்ண பாரதி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தாராபுரம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஆனந்தி, ஒன்றிய சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் அல்ட்ரா விக்னேஷ் ஏற்பாட்டில் ராகவேந்திர முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர்களுக்கு போர்வை, தலைக்கு அணியும் மப்புலர் மற்றும் இனிப்புக்களை ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு வழங்கினார். உடன் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குகன், ஒன்றியக்குழு துணை தலைவர் செல்லமுத்து உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் அ. இராசசேகரன்
### டிசம்பர் 9 (2012)



மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர். கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருபது ஆண்டுகளும், திருவாரூர் மாவட்டம் உருவாகியபோது முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழக விவசாய அணி இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர், தங்கமாக விளங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.